கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

கலை கலாசார பீடம்

மூன்றாம் வருட முதலாம் அரையாண்டு சிறப்பு

கலைமாணித்தேர்வு 2010/2011 (ஜனவரி/பெப்ரவரி 2013)

LIBRARY
10 JUN 2013
EASTERN UNIVERSITY

**SOCS – 3104 Sociology of Environment and Law**

நேரம் : 03 மணித்தியாலங்கள்

**பகுதி 1ல் யாதேனும் மூன்று வினாக்களுக்கும், பகுதி 11ல் யாதேனும் ஒரு வினாவுக்குமாக மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடை தருக.**

பகுதி – 1

01.அ. சுற்றுப்புறச்சூழல் என்பதற்கு அறிஞர்கள் வழங்கியுள்ள வரைவிலக்கணங்களைத் தொகுத்து எழுதுக.

(10 புள்ளிகள்)

ஆ. சமூகவியற் புலத்திலே சூழல் எனும் எண்ணக்கரு எவ்விதமான அர்த்தப்பாட்டினைப் பெறுகின்றது என்பதனை எடுத்துரைக்குக.

(15 புள்ளிகள்)

02.அ. உலகளாவிய சூழல் பிரச்சினைகளை எடுத்துக்காட்டி, சூழலைப் பாதுகாக்கும் செயன்முறையில் சமூக இயக்கங்களின் பங்கினைத் துலக்குக.

(10 புள்ளிகள்)

ஆ.இலங்கையில் சூழல் பாதுகாப்புத் தொடர்பிலான சமூக விழிப்புணர்வு போதுமானதாக உள்ளதா என்பது பற்றித் தக்க எடுத்துக்காட்டுக்களுடன் மதிப்பிடுக.

(15 புள்ளிகள்)

03.அ. சட்டம் பற்றிய சமூகவியல் என்பதனால் நீர் கருதுவது யாது? விளக்குக.

(10 புள்ளிகள்)

ஆ. சட்டத்திற்கும் சமூகத்திற்குமான இடைவினையின் தன்மையை எடுத்துக்காட்டி சமூக ஸ்திரப்பாட்டில் சட்டத்தின் அவசியத் தன்மையை எடுத்துக்காட்டுக. (15 புள்ளிகள்)

04.அ. நவீன அபிவிருத்தி முன்னெடுப்புக்கள் நிலைபேறான சூழல் பாதுகாப்போடு முரண்படுமாற்றினைத் தெளிவுபடுத்துக.

( 15 புள்ளிகள் )

ஆ. பெண்ணிலைச் சிந்தனையாளர்கள் பெண்களுக்கும் சூழலுக்குமான உள்ளார்ந்த தொடர்பினை எவ்விதம் எடுத்துக்காட்டுகின்றனர்.

( 10 புள்ளிகள் )

## பகுதி – 11

01. உலகமயமாதலின் நவீன போக்குகளின் விளைவாகச் சுற்றுப்புறச் சூழலுக்கும், மானிட வாழ்விற்கும் இடையிலான உள்ளார்ந்த தொடர்பு அறுக்கப்பட்டு, சூழலின் மீதான அச்சுறுத்தல் மேலோங்கிவரும் நிலைமையை விளக்கி, இப்பிரச்சினையைக் கையாள்வதற்குரிய வழிவகைகளையும் முன்வைக்குக.

(25 புள்ளிகள்)

02. காப்புரிமைத் திட்டங்கள், துரித உணவகங்கள், மிதமிஞ்சிய வளமாக்கிகளின் பாவனை என்பவற்றின் வாயிலாக இயற்கைச் சுற்றாடலின் மீதான மேற்குலகின் கொள்ளையிடலைக் கலாநிதி வந்தனா சிவா விளக்குமாற்றினை விமர்சன ரீதியில் எடுத்து விளக்குக.

(25 புள்ளிகள்)